

வேலூர் மாவட்டம் கே.வி.குப்பம் ஒன்றியம் வடுகந்தாங்கல் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த் தொகுதிமேம்பாட்டு நிதியில் கட்டப்பட்டுள்ள புதிய பேருந்து நிலையத்தை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். அருகில் நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்பு லட்சுமி,குடியாத்தம் சட்டமன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஒன்றிய குழு தலைவர் ரவிச்சந்திரன், ஒன்றிய கழக செயலாளர்கள் சீதாராமன், ஜெயா முருகேசன், மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சர் மா.சுப்ரமணியன், பால்வளத்துறை அமைச்சர் த.மனோ தங்கராஜ் ஆகியோர் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் பி.என்.ஸ்ரீதர் தலைமையில், நாகர்கோயில் மாநகராட்சிக்குட்பட்ட தொல்லவிளை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் மக்களை தேடி ஆய்வகம் சேவை திட்டத்தினை நேற்று (05.02.2024) தொடங்கி வைத்தார்கள். உடன் கன்னியாகுமரி நாடாளுமன்ற உறுப்பினர் வ.விஜய் வசந்த், நாகர்கோவில் மாநகராட்சி மேயர் ரெ.மகேஷ், நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் ஆனந்த் மோகன், உதவி ஆட்சியர் (பயிற்சி) ரஜத் பீட்டன் உட்பட பலர் உள்ளனர்.

### கரூர் மாவட்ட பெண்மணி

# அமுதவல்லியை - சிறு தொழில் முதலாளியாக உயர்த்திய முதலமைச்சர்!

## மாவட்ட தொழில் மையம் மூலம் உயர்ந்தவர் - முதல்வருக்கு நன்றி!

கரூர், பிப். 6 -

கரூர் மாவட்டம், ஆண்டான் கோயிலைச் சேர்ந்தவர் திருமதி. கே. அமுதவல்லி. அவர் வீடுகளுக்குப் பயன்படும், ஆடைகள் தயாரிக்கும் சிறு தொழிலில் ஈடுபட ஆர்வம் கொண்டிருந்தார். அந்த ஆர்வத்துடன், மாவட்டத் தொழில் மையத்தை அணுகி தான் சுயமாகத் தொழில்புரிவதற்குக் கடன் உதவிபுரியுமாறு கேட்டுக் கொண்டார்.

அமுதவல்லியின் தொழில் ஆர்வத்தின் அடிப்படையில், அவர் செய்ய விரும்பும் சிறு ஜவுளித் தொழிலை ஊக்கப்படுத்தும் நோக்கத்தில் அவருக்கு உதவி செய்திட மாவட்டத் தொழில் மையம் முன்வந்தது. அதன் பரிந்துரையுடன் இந்தியன் ஓவர்சீஸ் வங்கி திருமதி.அமுதவல்லி அவர்களுக்கு அண்ணல் அம்பேத்கர் வணிக சாம்பியன் திட்டத்தின்கீழ் 9 இலட்சத்து 87 ஆயிரம், ரூபாயை தொழில் கடனாக வழங்கியது. அதில் 35 சதவிகிதத் தொகை 3 இலட்சத்து 45 ஆயிரம் ரூபாய் அரசு மானியமாக திருமதி.அமுதவல்லிக்கு கிடைத்தது. மேலும், வங்கிக் கடன் தொகைக்குரிய வட்டியில் 6 சதவிகித வட்டித் தொகையையும் அரசு மானியமாக அவருக்கு அளித்தது.

இந்தக் கடன் உதவியோடு, அமுதவல்லி தன்னுடைய விருப்பப்படி, ஆடைகள் தயாரிக்கும் தொழிலில் தீவிரமாக ஈடுபட்டார். அதன் மூலம் அவருக்கு ஆண்டுக்கு 30 இலட்சம் ரூபாய்க்குமேல்அவர்தயாரித்தஆடைகள்விற்பனையாயின. இதில் அவருக்கு 8 இலட்சம் ரூபாய் லாபமாக கிடைத்தது.

குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை செயல்படுத்தும் முதலமைச்சர் அவர்களின் திட்டம் சாதாரண



ஒரு பெண்மணியைப் புதிய தொழில் முகவராக மாற்றிச் சாதனை படைத்துள்ளது. மாவட்டத் தொழில் மையத்தின் மூலம் தன்னைத் தொழில் முதலாளியாக உயர்த்திய மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு திருமதி.அமுதவல்லி நன்றி கூறி மகிழ்ச்சியில் திளைத்து வருகிறார்.

### சீர்காழி தமிழிசை மூவர் மணிமண்டபம் -

# மாயூரம் முன்சீப் வேதநாயகம் அரங்கம்!

## அமைச்சர் மு.பெ.சாமிநாதன் ஆய்வு! நிவேதா எம்.முருகன் எம்.எல்.ஏ., எம்.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. பங்கேற்பு !

மயிலாடுதுறை, பிப். 6 -

மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழி தமிழிசை மூவர் மணிமண்டபம் மற்றும் மயிலாடுதுறை நகராட்சி பகுதியில் கட்டப்பட்டு வரும் மாயூரம் முன்சீப் வேதநாயகம் அரங்கம் ரூ.3 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வருவதையும் தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் .மு.பெ.சாமிநாதன் ஆய்வு செய்தார். உடன் மயிலாடுதுறை மாவட்ட கழக செயலாளர்பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாவட்ட ஆட்சியர் ஏ.பி.மகாபாரதி மயிலாடுதுறை நாடாளுமன்ற உறுப்பினர் செ.இராமலிங்கம், சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் எம். பன்னீர்செல்வம் , மயிலாடுதுறை சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜகுமார், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் ஜி.என். ரவி, முத்து மகேந்திரன்,மாநில விவசாய தொழிலாளர் அணி இணைச் செயலாளர் ஜெக. வீரபாண்டியன், மாவட்டக் கழக அவைத்தலைவர் கே.ஜி.சீனிவாசன் துணை செயலாளர் எஸ். செல்வமணி கண்ணகி மாவட்ட கழக பொருளாளர் மகா.அலெக்சாண்டர் ஒன்றிய கழகச் செயலாளர்கள் செல்லசேது. ரவிக்குமார், மலர்விழி திருமாவளவன், ஏ.ஜி.ஜே.பிரபாகர், பஞ்சு.குமார், அமிர்த.விஜயகுமார், பி. எம்.அன்பழகன், எம்.அப்துல் மாலிக், என்,இளையபெருமாள், ஞான.இமய நாதன், பி.முருகுமணி, மூவலூர் எம். மூர்த்தி, கு.வைத்தியநாதன், மங்கை எம்.சங்கர் ஏ.ஆர். ராஜா, சீர்காழி நகரச் செயலாளர் மா. சுப்பராயன் மயிலாடுதுறை நகர செயலாளர் குண்டாமணி (எ) என். செல்வராஜ், பேரூர் கழகச் செயலாளர் அண்ணாதுரை, முத்துராஜா, அன்புச்செழியன், சம்சுதீன், பொதுக்குழு உறுப்பினர்கள் பி.சிவதாஸ், காந்தி, கென்னடி, ஹர்ஷத், நத்தம் வின்சென்ட், எஸ். வெற்றிவேல் சங்கரநாராயணன், சுபாநெடுஞ்செழியன் மாவட்ட ஊராட்சித் தலைவர் உமாமகேஸ்வரி சங்கர், ஒன்றியக்குழு தலைவர்கள் காமாட்சி மூர்த்தி , ஜெயப்பிரகாஷ், மகேந்திரன், சீர்காழி நகர் மன்ற தலைவர் துர்கா பரமேஸ்வரி மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ.சாமிநாதன்செய்தியாளர்களுக்கு அளித்த பேட்டியில் மாயூரம் கவிஞர் வேதநாயகம் பிள்ளை அவர்களுக்கு அரங்கம் மற்றும் சிலையும் மயிலாடுதுறையில் அமைக்கப்படும் என்று முதலமைச்சர் அவர்கள் ஆணையிட்டார்கள். அந்த வகையில், செய்தித்துறையின் மூலமாக அந்த பணியை பொதுப்பணித்துறையின் வாயிலாக இந்த அரங்கத்தின் கட்டிடப் பணிகள் நடைபெற்று வருகின்றது. இதற்கு ரூ.3 கோடி மதிப்பீட்டில் முதலமைச்சர் அவர்கள் நிதி வழங்கியுள்ளார்கள். இதுபோன்று, தமிழ்நாடு முழு வதும் சுதந்திர போராட்ட வீரர்கள், தமிழ்மொழி தியாகிகள், மக்களுக்காக உழைத்திட்டவர்கள் போன்ற தலைவர்களுக்கு அரங்கம், சிலை அமைக்கும் பணியை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் வழியில் தமிழ்நாடு அரசு செயல்படுத்தி வருகிறது. அந்த வகையில், சீர்காழியில் தமிழிசை மூவர் மணிமண்டபம் பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணிகளையும் பார்வையிட்டு ஆய்வு செய்துள்ளோம். மேலும், இப்பணிகள் விரைவாக முடிவுற்று மக்கள் பயன்பாட்டிற்கு வர நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

அதுபோல், மயிலாடுதுறை மாவட்டம் சீர்காழியில் அமைந்துள்ள தமிழிசை மூவர் மணிமண்டபமும் ஆய்வு செய்து செய்தித் துறை மூலம் பொதுப் பணித்துறை வாயிலாக மதிப்பீடு தயார் செய்யப்பட்டு ஏறத்தாழ ரூ.47 இலட்சம் மதிப்பீட்டில் 95 சதவீத பணிகள் நடைபெற்றுள்ளது. விரைவில் இது மக்களுடைய பயன்பாட்டிற்கு குறிப்பாக, போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகள் பயன்பெறும் வகையில் இவ்விடம் ரூ.13 லட்சம் மதிப்பீட்டில் பணிகள் நடைபெற்று உள்ளது. என தமிழ்வளர்ச்சி மற்றும் செய்தித்துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் தெரிவித்தார்.

### தி.மு.க. இலக்கிய அணி

# மதுரை தெற்கு மாவட்ட அமைப்பாளர் நியமனம்!

## தி.மு.க.இலக்கிய அணிச் செயலாளர் வி.பி.கலைராஜன் அறிவிப்பு !

மதுரை தெற்கு மாவட்ட தி.மு.க. இலக்கிய அணி அமைப்பாளராக பா.விஜய் (2/42, தெற்குத் தெரு, பெரியக்கட்டளை அஞ்சல், பேரையூர் தாலுக்கா, மதுரை - 625 527) நியமிக்கப்படுகிறார். ஏற்கனவே நியமிக்கப்பட்ட மாவட்ட துணை அமைப்பாளர்கள் இவருடன் இணைந்து பணியாற்றிட கேட்டுக் கொள்ளப் படுகிறார்கள்.

"அண்ணா அறிவாலயம்"
சென்னை - 18
நாள்- 05.02.2024

வி.பி.கலைராஜன்,
செயலாளர்
தி.மு.க. இலக்கிய அணி

### கு.புகழ்வேந்தன் தலைமை! எம்.கிருஷ்ணமூர்த்தி - இரா.துரைராஜ் - வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் முன்னிலை!

# சைதையில் அய்யன் திருவள்ளுவர் படிப்பகம் 24 ஆம் ஆண்டு விழா! நல உதவிகள்!

## அமைச்சர் மா.சுப்பிரமணியன் வழங்குகிறார்! தமிழச்சி தங்கபாண்டியன் - பா.தாயகம் கவி - மு.மகேஷ்குமார் பங்கேற்பு!

சென்னை, பிப், 6,

சைதை மேற்கு பகுதி தி.மு.க.140 வது வட்டத்தில் அமைந்துள்ள அய்யன் திருவள்ளுவர் படிப்பகத்தின் 24 ஆம் ஆண்டு விழா மற்றும் நல உதவிகள் வங்கும் விழா இன்று (6.2..2024செவ்வாய்க்கிழமை) மாலை 6 மணிக்கு, திருவள்ளுவர் படிப்பகத்திதில் திருவள்ளுவர் படிப்பகத்தின் நிறுவனர் மற்றும் மாவட்டக் கழகத்தின் பிரதிநிதி கு.புகழ்வேந்தன் ஏற்பாட்டில் நடைபெறுகின்றது.

மேற்குப் பகுதிச் செயலாளர் 10 வது மண்டலக்குழுத் தலைவர் எம்.கிருஷ்ணமூர்த்தி, கிழக்குப் பகுதிச் செயலாளர்13 வது மண்டலக்குழுத் தலைவர் இரா. துரைரராஜ், தலைமைப்பொதுக்குழு உறுப்பினர் மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் எம்.ஸ்ரீதரன் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

சைதை த.சம்பத், த.பாபு, கவிதா கவுதமன், ந.தமிழரசு, சைதை ஆர்.ரவி, சைதை ஜி.பாபு., எம்.சுரேஷ்குமார், பிரஸ் க.மணி,லால் மனோகர், எஸ்.மணிவண்ணன், எம்.வளர்மதி, அ.வீரமணி, ஆ.கவிராஜ், எம்.அய்யாவு, ஆர்.பன்னீர், கே.ஞானம், ஈ.பாண்டுரங்கன், ஜி.ஜே. மோசஸ், எம்.ஏ. நகர் சேகர், ச.தினகரன்,எஸ். ரவீந்திரகுமார் ஆகியோர் வரவேற்றுப் பேசுகின்றனர்.

இந்நிகழ்ச்சியில் மாவட்டக் கழகச் செயலாளர் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலந்து கொண்டு நல உதவிகள் வழங்கி சிறப்புரையாற்றுகிறார்.

மேலும் தமிழச்சி தங்கபாண்டியன் எம்.பி.,பா. தாயகம் கவி எம்.எல்.ஏ., துணை மேயர் மு.மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் சைதை மா.அன்பரசன், சைதை சம்பத்,மின்னல் கந்தப்பன், களக்காடி எல்லப்பன், சைதை ஆர். ரமேஷ், வி.பி.ஜானகிராமன்,சை.மு.சேகர்,அட்கோ கமலநாதன், எஸ்.பி.கோதண்டம், எம்.நாகா, டி.என். சிவமணி, கிண்டி ஆர்.எல். செல்வம், ஜி.கே. ராமச்சந்திரன் , வீ. மதிவாணன் , பொன். ஜெய்சிங், எ.ரவி, ஏ.சங்கர்,பி.தமிழ்மாறன், கே.கன்னியப்பன்,ஜிஎம். எஸ்.தினேஷ், ஏ.நாராயணன், ந.மோகன்,கோ.ரவி, எஸ்.ரமேஷ், எம்.சுரேஷ், எம்.நாச்சியம்மாள், ஏ. விஜயா,குமரவேல், ரமேஷ், வி.கணேஷ், எ. பொன்னுரங்கன், எஸ்.ரமேஷ், வி. ஹரிகுமார், எ.நாராயணன், ஜி.சுப்பிரமணி, ஜெ. பாலாஜி, ப.தணிகாசலம், பி. வேலாயுதம், பி. ரிச்சர்ஸ்ட், து.பிரபு, சந்தோஷ்குமார், எம்.பார்த்திபன், சி.அண்ணாமலை,த.பழனி சுந்தரவடிவேல், ராஜா, பி.கே. பிரகாஷ்,

எம்.டி.அருள், கண்ணன், விவேக்செல்வம், வி.சரவணன், ஜே.இளையராஜா, சிவலிங்கம், ஆர்.கலைமணி, ஆர்.சேகர், பி.எஸ்என்.எல். எஸ்.பார்த்தசாரதி, ராஜி, ஏ.ராமலிங்கம், எஸ். பார்த்தசாரதி, பி.ஏழுமலை, பி. நந்த குமார் , கே.மதியழகன்,எம்.கிருஷ்ணன், பி.கே. ரமேஷ், சசிக்குமார், அப்பு, முரளி, இளங்கோ, அரி. கோ.க.மணி, ஆட்டோ சீனு, ஆட்டோ முருகேசன், ஆட்டோ விஜயன், நல்லதம்பி, ஆர்.சிவா, சுரேஷ், பிச்சுமணி, ரவிக்கண்ணன், லட்சுமணக்குமார், என். பி.ஜோதி, சுரேஷ்பாபு, கோட்டீஸ்வரன், வி. அசோக், ராம்குமார்,நந்தகுமார் பூபதி, இளையராஜா, என்.வாசு, ஆர்.சிவா, புஷ்பா சண்முகம்,டி.திலகவதி, எம்.கிரேசி, பி. கீதா,எம்.மங்களம், ஆர். சாந்தி, ஆர்.பூங்காவணம், டி. சாவித்ரி, ஆர்.சரஸ்வதி,ஆர்.செல்வி, எம். ராஜேஸ்வரி, பு.கலா, ஆர். மரகதம் மற்றும் பலர் கலந்து கொள்கின்றனர்.

எஸ்.ரங்கநாதன்,து.பிரபு ஆகியோர் நன்றி கூறுகின்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை மாவட்டப் பிரதிநிதி மற்றும் அய்யன் திருவள்ளுவர் படிப்பகத்தின் நிறுவனர் கு.புகழ்வேந்தன் ஏற்பாடு செய்துள்ளார்.

### அனைத்து துணைப் பதிவுத்துறை தலைவர்கள் -

# மாவட்ட பதிவாளர்கள் - அலுவலர்கள் ஆலோசனைக் கூட்டம்!

## அமைச்சர் பி.மூர்த்தி தலைமை!

சென்னை, பிப். 6

வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் பி. மூர்த்தி தலைமையில் நேற்று (05.02.2024) நந்தனம் ஒருங்கிணைந்த வணிகவரி மற்றும் பதிவுத்துறை வளாகக்கூட்டரங்கத்தில் 2024-ஆம் ஆண்டு ஜனவரி மாதத்திற்கான அனைத்து துணைப்பதிவுத்துறை தலைவர்கள், மாவட்டப் பதிவாளர்கள் (நிர்வாகம் மற்றும் தணிக்கை), மாவட்ட வருவாய் அலுவலர் / தனித் துணை ஆட்சியர் (முத்திரை) மற்றும் உதவி செயற்பொறியாளர் ஆகியோரின் பணிச்சீராய்வு கூட்டம் நடைபெற்றது.

தமிழ்நாடு அரசின் வருவாய் ஈட்டும் துறைகளில் முக்கிய துறையாக விளங்கி வரும் பதிவுத்துறையில் கடந்த வருடம் 2023 ஜனவரி வரை அடைந்த வருவாயை விட 2024 ஜனவரி முடியவுள்ள காலத்தில் கூடுதலாக ரூ.952.86/ கோடி வருவாய் ஈட்டப்பட்டுள்ளது.

ஆய்வுக்கூட்டத்தில் பேசிய அமைச்சர் பி. மூர்த்தி, துணைப்பதிவுத்துறை தலைவர்கள் அனைவரும் பதிவுத்துறைக்கு அரசு நிர்ணயித்த வருவாய் இலக்கினை அடையும் பொருட்டு தத்தம் மண்டலத்தில் பணிபுரியும் சார்பதிவாளர் அலுவலகம் வாரியாக சீராய்வு மேற்கொள்ள வேண்டும் என அறிவுறுத்தினார்.

வணிகவரி மற்றும் பதிவுத்துறை செயலாளர் அவர்கள் இந்திய முத்திரை ச்சட்டப்பிரிவு 47A-ன் கீழ் விரைவில் இறுதியாணை பிறப்பித்து இழப்பினை வசூலிக்கவும், தணிக்கை இழப்பு மற்றும் வருவாய் வசூல் சட்டத்தின் கீழ் வசூலிக்கப்பட வேண்டியதொகைகளை தொய்வின்றி வசூலித்து அரசிற்கு வர வேண்டிய வருவாயினை பெருக்க அறிவுரைகள் வழங்கினார்.

மேலும், பதிவுக்கு வரும் பொதுமக்களின் பணிகளை செவ்வனே செய்து புகாருக்கு இடமின்றி அனைத்து அலுவலர்களும் / பணியாளர்களும் பணிபுரிந்து, அரசு நிர்ணயித்த வருவாய் இலக்கினை அடைந்திட வேண்டும் என வணிகவரி மற்றும் பதிவுத் துறை அமைச்சர் அறிவுறுத்தினார்.

இக்கூட்டத்தில் வணிக வரி மற்றும் பதிவுத்துறை அரசுச்செயலாளர் திருமதி. பா.ஜோதி நிர்மலாசாமி, பதிவுத்துறை தலைவர் தினேஷ் பொன்ராஜ் ஆலிவர், கூடுதல் பதிவுத்துறை தலைவர்கள் அ.முகமது, ஜாபர் சாதிக், வே.நல்லசிவன் மற்றும் பதிவுத்துறை உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.


**பெருநகர சென்னை மாநகராட்சி**
**மண்டலம் - 6**
ம.அ.6.ந.க.எண்.இ1/7888/2023

**மின்னணு திறந்த வெளி (Online Open Re - Tender)**
**மறு ஒப்பந்தப்புள்ளி கோரும் அறிவிப்பு**

மண்டல அலுவலர் - 6 அவர்களால் கீழ்கண்ட பணிக்கு மின்னணு திறந்தவெளி **(Online Open Re-Tender)** மறு ஒப்பந்தப்புள்ளி கோரப்படுகிறது.

பெருநகர சென்னை மாநகராட்சி, மண்டலம் - 6, பகுதி - 15, கோட்டம் - 69, ஜெகநாதன் தெருவில் அமைந்துள்ள பல்நோக்கு மையத்திற்கு உள்கட்டமைப்பு வசதிகளுடன் கூடிய முதல் தளம் அமைக்கும் பணி.

மொத்தப் பணியின் தோராய மதிப்பீட்டுத் தொகை ரூ.64.75 இலட்சம் (முன்வைப்பு தொகை ரூ.65,000/-)

ஒப்பந்தப்புள்ளி பெறும் கடைசி நாள் 15.02.2024 மற்றும் நேரம் அன்று மாலை 3.00 மணி வரை.

ஒப்பந்தப்புள்ளி திறக்கும் நாள் 16.02.2024 மற்றும் நேரம் அன்று மாலை 3.30 மணி.

மேலும் விவரங்களுக்கு (http://tntenders.gov.in) மற்றும் www.chennaicorporation.gov.in என்ற இணையதளம் மூலம் தெரிந்து கொள்ளலாம்.

செ.ம.தொ.இ / 677 / ஒப்பந்தப்புள்ளி / 2024

**மண்டல அலுவலர் / ம -6**


## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### தடா தனசேகரன்
### பிப்ரவரி 6 (1992)



ஜெயலலிதா அரசின் “தடா” சட்டத்தைக் கண்டித்து சென்னையில் நடைபெற்ற மாபெரும் பேரணியில் போலீசார் நடத்திய துப்பாக்கிச் சூட்டில் குண்டடிபட்டு உயிரிழந்தார் சென்னை 3வது வட்ட இளைஞர் அணியின் தம்பி தனசேகரன்.

“தம்பி! உன் தியாகம்; தமிழ்நாட்டு மக்களை ஒருங்கிணைத்து; தடா தர்பார் ஆட்சியை வீட்டுக்கு அனுப்புவதற்கான முன்னுரையாக அமையட்டும்! எனக் கூறி; “அந்த ஆதிதிராவிட இனத்து அடலேறாம் தனசேகரனுக்கு வீரவணக்கம் செலுத்துவோமாக” என தலைவர் கலைஞர் அவர்கள் உடன்பிறப்புக்கு எழுதிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தலைமைக் கழகம்
தி.மு.க.